©
தமிழ்நாடு அரசு
2023

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 8]
சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 22, 2023
மாசி 10, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு–2054

## பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 9 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண். 1/2023.**

**1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்த)ச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 9/1982.

6 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன்பின்பு இதில், முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 6 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (a) கூறில் ''காது கேளாதவர் – வாய் பேசாதவர் அல்லது தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

39 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 39 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாதவர் – வாய் பேசாதவர் அல்லது தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசுச் செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 10 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண். 2/2023.**

**தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

## பகுதி - I.
## முன்னுரை.

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

## பகுதி - II.
## 1965 ஆம் ஆண்டு மதுரை—காமராசர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

6 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 33/1965.

2. (இதன்பின்பு இந்தப் பகுதியில் 1965—ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1965—ஆம் ஆண்டு மதுரை—காமராசர் பல்கலைக்கழகச் சட்டத்தின் 6 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (a) கூறில், ''காது கேளாத - வாய் பேசஇயலாதவர் அல்லது தொழுநோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

43 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. 1965 ஆம் ஆண்டு சட்டத்தின் 43 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத - வாய் பேசஇயலாதவர் அல்லது தொழு நோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

## பகுதி - III.
## 1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

6 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 1/1982.

4. (இதன்பின்பு இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 1/1982 எனக் குறிப்பிடப்படுவதான) 1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 6 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (a) கூறில், ''காது கேளாத - வாய் பேசஇயலாதவர் அல்லது தொழு நோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

49 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. தமிழ்நாடு சட்டம் 1/1982—இன் 49 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத - வாய் பேசஇயலாதவர் அல்லது தொழு நோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

## பகுதி - IV.
## 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

6 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 2/1982.

6. (இதன்பின்பு இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 2/1982 எனக் குறிப்பிடப்படுவதான) 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தின் 6 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (a) கூறில், ''காது கேளாத - வாய் பேசஇயலாதவர் அல்லது தொழுநோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

49 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

7. தமிழ்நாடு சட்டம் 2/1982—இன் 49 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத - வாய் பேசஇயலாதவர் அல்லது தொழு நோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

## பகுதி - V.

### 1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 15/1984.

6 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

8. (இதன்பின்பு இந்தப் பகுதியில் 1984–ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1984–ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் 6 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (a) கூறில், ''அல்லது காது கேளாத – வாய் பேசஇயலாதவர் அல்லது தொழுநோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

41 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

9. 1984–ஆம் ஆண்டு சட்டத்தின் 41 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத – வாய் பேசஇயலாதவர் அல்லது தொழு நோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

## பகுதி - VI.

### 1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 23/1985.

7 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

10. (இதன்பின்பு இந்தப் பகுதியில், 1985 ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்தின் 7 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (a) கூறில், ''காது கேளாத – வாய் பேசஇயலாதவர் அல்லது தொழுநோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

55 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

11. 1985 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 55–ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத – வாய் பேசஇயலாதவர் அல்லது தொழு நோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

## பகுதி - VII.

### 1990 ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 31/1990.

6 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

12. (இதன்பின்பு இந்தப் பகுதியில் 1990–ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1990 ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 6 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (a) கூறில், ''அல்லது காது கேளாத – வாய் பேசஇயலாதவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

49 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

13. 1990 ஆம் ஆண்டு சட்டத்தின் 49 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத – வாய் பேசஇயலாதவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

## பகுதி - VIII.

### 1997 ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 45/1997.

6 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

14. (இதன்பின்பு இந்தப் பகுதியில் 1997 ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1997 ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 6 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (a) கூறில், ''அல்லது காது கேளாத – வாய் பேசஇயலாதவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

50 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

15. 1997 ஆம் ஆண்டு சட்டத்தின் 50 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத – வாய் பேசஇயலாதவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

## பகுதி - IX.

### 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 27/2002.

18 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

16. (இதன்பின்பு இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 27/2002 எனக் குறிப்பிடப்படுவதான) 2002 ஆம் ஆண்டு திறந்த நிலைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 18 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (a) கூறில், ''அல்லது காது கேளாத – வாய் பேசஇயலாதவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

50 ஆம் பிரிவிற்கான திருத்தம். 17. தமிழ்நாடு சட்டம் 27/2002–இன் 50 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத – வாய் பேசஇயலாதவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

## பகுதி - X.

### 2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

6 ஆம் பிரிவிற்கான திருத்தம். 18. (இதன்பின்பு இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 32/2002 எனக் குறிப்பிடப்படுவதான) 2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டத்தின் 6 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (a) கூறில், ''அல்லது காது கேளாத – வாய் பேசஇயலாதவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 32/2002.

49 ஆம் பிரிவிற்கான திருத்தம். 19. தமிழ்நாடு சட்டம் 32/2002–இன் 49 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத – வாய் பேசஇயலாதவர் '' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

## பகுதி - XI.

### 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

17 ஆம் பிரிவிற்கான திருத்தம். 20. (இதன்பின்பு இந்தப் பகுதியில் 2008 ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் 17 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (a) கூறில், ''அல்லது காது கேளாத – வாய் பேசஇயலாதவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 33/2008.

47 ஆம் பிரிவிற்கான திருத்தம். 21. 2008 ஆம் ஆண்டு சட்டத்தின் 47 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத – வாய் பேசஇயலாதவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசுச் செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.